நாமல்ஓய பிரதேச சபை
அம்பாறை மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 06 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 06 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நாமல்ஓய பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) முத்திரைக் கட்டண பதிவேட்டின் படி நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 346,204 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை முத்திரைக் கட்டண வருமானமாக ஐந்தொகையில் ரூபா 254,204 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பேரேட்டின் பிரகாரம் நிலுவை வியாபார அனுமதிப் பத்திரக் கட்டண வருமானம் ரூபா 19,900 ஆக இருந்த போதிலும் அது ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் 150(4) ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 19,900 இனை அறவிடுவதற்காக பிரதேச சபைகள் அதிகாரச் ஸ்ரீசட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிக் கோப்பு

| | | |
|---|---|---|
| (i) | விதி - 62 | செயலாளரினால் கைத்தொழில்வரி செலுத்துமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | விதி - 180 | காசு, களஞ்சியம் மற்றும் வருமானங்களைச் சேகரிக்கும் நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக செயற்படும் மூன்று உத்தியோகத்தர்களினால் பிணை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம்

| | | |
|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 757(2) | மீளாய்வாண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 1647(உ) | மோட்டார் வாகன பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,648,618 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 406,615 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 2,242,003 அதிகரிப்பொன்றைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் நிதி விளைவுகள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம், வாடகை வருமானம் மற்றும் ஏனைய வருமானம் என்பன 25 சதவீதம் முதல் 66 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரிப்பைக் காண்பித்ததுடன், சேவைக்கட்டணம், பிடியாணைக் கட்டணம் மற்றும் தண்டப்பண வருமானம் என்பன 12 சதவீதம் முதல் 30 சதவீதம் வரையிலான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் சம்பளமும் படிகளும், வழங்கலும் உபகரணங்களும் மற்றும் மூலதனச் சொத்துக்களின் பழுதுபார்த்தல்களுக்கான செலவினம் என்பன 41 சதவீதம் முதல் 299 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரிபொன்றைக் காண்பித்தது.

2.3 வருமான நிருவாகம்

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வாடகை | 923 | 1,230 | 4 |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 381 | 315 | - |
| (iii) | சேவைகளுக்கான கட்டணம் | 85 | 59 | - |
| (iv) | பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும் | 708 | 691 | 111 |
| (v) | ஏனைய வருமானம் | 1,164 | 219 | 254 |

2.3.2 முத்திரைக் கட்டணம்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முத்திகைக் கட்டணம் ரூபா 346,204 தொகையை பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) உள்ளூராட்சி அமைச்சினால் சபைக்கு வழங்கப்பட்ட 05 வாகனங்களின் உரித்தைக் கையேற்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் 2015 மார்ச் 23 வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்படுகின்ற 36 நெல் ஆலைகள் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை.

(இ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 139 இன் பிரகாரம் காசோலை மூலம் மேற்கொள்ளப்படுகின்ற சகல கொடுப்பனவுகளுக்காகவும் தமது வங்கி மீதி போதியளவில் இருக்கின்றதா என செலுத்தும் உத்தியோகத்தரினால் ஆராய்ந்து பார்க்க வேண்டிய போதிலும் சபையின் நெல்சிப் கணக்கிற்குரிய காசோட்டுமீதி ரூபா 706,251 மறைப்பெறுமதியாகும் வகையில் 2014 யூன் மாதத்தில் காசோலை வரையப்பட்டிருந்தது.

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையில் சேவையாற்றி பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து 2007 மே முதல் அறவிட வேண்டிய ரூபா 39,988 கடன் பணத்தையும், இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து 2011 சனவரி முதல் அறவிட வேண்டிய ரூபா 1,600 கூட்டுமொத்தத் தொகையையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வங்கிக் கணக்கில் வங்கியினால் 2011 ஆம் ஆண்டில் பிழையாக வரவு வைக்கப்பட்ட ரூபா 23,000 தொகையை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தெஹிஅத்தகண்டி வலயக் கல்வி அலுவலகத்திற்கு பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற முகாமைத்துவ உதவி உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 38,388 தொகையான கடன் பணத்தை வலயக் கல்வி அலுவலகம் உரிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிட்டிருந்த போதிலும், அப்பணத்தை சபைக்கு பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

---

2014 திசெம்பர் மாதம் மற்றும் 2015 சனவரி மாதம் என்ற காலப்பகுதியில் உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சிலிருந்து சபைக்கு வழங்கப்பட்டு பதிவு செய்யப்படாத 05 வாகனங்களைப் பதிவு செய்வதற்குத் தேவையான ஆவணங்கள் கணக்காய்வுத் திகதியான 2015 மார்ச் 12 வரையிலும் அமைச்சிலிருந்து சபைக்கு வழங்காதிருந்தமையினால் பயன்படுத்தப்படாமல் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

மீளாய்வாண்டில் பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 20 சதவீதம் முதல் 109 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்